## அத்தியாயம் – 5

### "யுகங்களுக்கும் தலைமுறைதலைமுறைக்கும் மறைக்கப்பட்டு இப்போது பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியம்" – கொலோ.1:25

முதலாம் வாக்குத்தத்தத்தின் மங்கலான வெளிச்சம் – ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் – நிறைவேறாத நம்பிக்கை – பெந்தெகொஸ்தே நாளில் வெளிப்படத் தொடங்கிய இரகசியம் – அந்த இரகசியம் என்ன? – ஏன் அதிக வருடம் இரகசியமாயிருந்தது? – உலகத்திற்கு இன்னும் அது இரகசியமாகவே உள்ளது – ஏற்றகாலத்தில் எல்லாருக்கும் வெளிப்படுத்தப்பட வேண்டியது – எப்போது அந்த இரகசியம் முடிவுபெறும்?

மனுக்குலமானது தீமையின் கீழ் இருந்து அதன் பலனை அறியாமலிருக்கும் வேளையில், தேவன் வரப்போகிற மீட்பர் மூலம் அவர்களை விடுவித்து ஆசீர்வதிக்கப்போகும் தம்முடைய திட்டத்தைத் தொடர்ந்து தெரிவித்து வந்தார். ஆனால், யார் அந்த இரட்சகர் என்பது நான்காயிரம் வருடங்களாக இரகசியமானதாக இருந்து, கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அதாவது கிறிஸ்தவ அல்லது சுவிசேஷ யுகத்தின் ஆரம்பத்தில் தான் அது தெளிவாக வெளியாக்கப்பட ஆரம்பித்தது.

நமது ஆதிப்பெற்றோர் ஜீவனையும் ஏதேனின் மகிழ்ச்சியையும் இழந்து, பாவத்தின் நீதியான தீர்ப்பை அடைந்து சஞ்சலத்தால் நிறைந்து, எந்தவித நம்பிக்கையுமின்றி இருந்த காலத்தை நோக்கிப் பார்க்கும்போது, ஸ்திரியின் வித்தானது சர்ப்பத்தின் தலையை நசுக்குமென்ற தெளிவற்ற வார்த்தையைவிட வேறெந்த நம்பிக்கையும் அவர்களுக்கு இல்லை. அடுத்தடுத்த வளர்ச்சியின் வெளிச்சத்தில் இது முக்கியத்துவம் வாய்ந்ததாக நமக்கு இருந்தாலும், அவர்களுக்கு அது தெளிவற்ற மங்கலான வெளிச்சமாயிருந்தது. இரண்டாயிரம் வருடங்கள் இந்த வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கான எந்தவித ஆதாரமுமில்லாமல் உருண்டோடியது.

இரண்டாயிரம் வருடங்களுக்கு பின்பு தேவன் ஆபிரகாமை அழைத்து, அவருடைய வித்து அல்லது சந்ததி மூலம் உலகத்தின் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்று வாக்குத்தத்தம் பண்ணினார். இதன் மூலம் தேவன் தாம் முன் தீர்மானித்தபடி, ஆதிப்பெற்றோருக்குக் கொடுத்த வாக்குத்தத்தை நிறைவேற்றுவதுபோல் தோன்றியது. ஆனால், அநேக வருடங்கள் கடந்து சென்றன. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானை அவர் சுதந்தரியாமலும் அவர்களுக்கு ஒரு குழந்தையும்கூட இல்லாத நிலையில், ஆபிரகாமும் சாராளும் வயது முதிர்ந்தவர்களாய் போனார்கள். இப்போது ஆபிரகாம் தான் தேவனுக்கு அவருடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற உதவி செய்ய வேண்டுமென்று நினைத்து, அடிமைப் பெண்ணாகிய ஆகார் மூலம் இஸ்மவேலைப் பெற்றார். ஆனால், தேவனுக்கு இந்த உதவி தேவைப்படாமல், ஏற்ற காலத்தில் வாக்குத்தத்தத்தின் பிள்ளையாகிய ஈசாக்கு பிறந்தார். அப்போது வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ராஜாவும், சகல ஜனங்களையும் ஆசீர்வதிப்பவருமானவர் வந்துவிட்டது போல் தோன்றிற்று. ஆனால், அவ்வாறில்லாமல் வருடங்கள் மீண்டும் உருண்டோடி தேவ வாக்குத்தத்தம் நிறைவேறாததுபோல் தோன்றியது. ஏனெனில், ஈசாக்கும் அவருடைய சந்ததியாகிய யாக்கோபும்கூட மரித்துவிட்டனர். ஆனால், சிலர் அப்போதும் இந்த வாக்குத்தத்தத்தின்மேல் உறுதியாக விசுவாசம் வைத்திருந்தனர். எவ்வாறெனில் தேவன் ஆபிரகாமோடு செய்த உடன்படிக்கையை ஈசாக்குக்கும் அவருக்குப் பிறகு யாக்கோபுக்கும் உறுதிப்படுத்தி, இஸ்ரயேலருக்கு அதை நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்தி இவர்கள் விசுவாசத்தை தேவன் நிலைத்திருக்கச் செய்தார். (1 நாளாகமம் 16:16, 17)

யாக்கோபின் மரணத்தின்போது அவருடைய வம்சமானது முதலாவதாக இஸ்ரயேலின் பன்னிரண்டு கோத்திரங்கள் என அழைக்கப்பட்டதுடன், தேவனால் "தெரிந்துகொள்ளப்பட்ட ஜாதியாகவும்" அங்கீகரிக்கப்பட்டனர். (ஆதி.49:28; உபா.26:5) மேலும், எகிப்தில் இவர்கள் இருந்தபோது பார்வோனிடத்தில் தயவு பெற்றவர்களாயிருந்ததால் அவர்கள் பலமுள்ள ஜாதியாக மாறி, இவர்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆபிரகாமின் வித்தாக கானானை சுதந்தரித்து, உலகமனைத்தையும் ஆளுகை செய்து ஆசீர்வதிக்கப்போகும் சந்ததியென

எதிர்பார்க்க இடமிருந்தது. ஆனால், பிறகு எகிப்தியருடைய அவர்கள் நீண்டகாலம் அடிமைகளாக எகிப்தியருடைய அதிகாரத்தின் கீழ் வந்தபோது அந்த நம்பிக்கையானது முற்றிலும் சுக்குநூறாகச் சிதறியதுடன் வாக்குத்தத்தமும் மறக்கப்பட்டுபோனது.

மெய்யாகவே, தேவனுடைய வாக்குத்தத்தங்களானது இரகசியங்களாக மறைக்கப்பட்டு, அவருடைய வழிகள் மனிதன் கண்டுபிடிப்பதற்குக் கூடாததாயுமிருந்தது. இருந்தபோதிலும் ஏற்றகாலத்திலே தேவன் மாபெரும் இரட்சகராக மோசேயை எழுப்பி, அவருடைய கையினால் வல்லமையுள்ள அற்புதங்களை எகிப்திலே நடப்பித்து அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கினார். ஆனால், இஸ்ரயேலர் கானான் தேசத்தை அடையுமுன் மோசே மரித்துப்போனார். ஆனால், தேவனுடைய வார்த்தையாக அவர் மரிப்பதற்குமுன் அவர், ‘‘என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிலிருந்து தேவன் எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக’’ என்று அறிவித்தார். (உபா.18:15; அப்.3:22) அவர் அனுப்பப்போகும் அந்த இரட்சகர் மூலம் முழுவதுமாக அவர்கள் ஒரு தேசமாக, எதிர்காலத்தில் இவ்வுலகை ஆளுகை செய்து ஆசீர்வதிப்பது மாத்திரமல்ல, அவர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் அவர், வெற்றிவீரராக அந்த வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்ற தேவ திட்டத்தைப் பற்றிய இன்னும் அதிகமான பார்வையை அவர்களுக்கு அளித்தது. பின்பு இரட்சகர் அல்லது மீட்பர் என அர்த்தங்கொள்ளும் யோசுவா இஸ்ரயேலருடைய தலைவராகி, அவர் தலைமையில் அவர்கள் மாபெரும் வெற்றிகளை அடைந்து, அதன் பின்பே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை அவர்கள் அடைந்தார்கள். அப்போதும் உண்மையான தலைவர், அல்லது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர் வந்து, அந்த வாக்குத்தத்தம் முழுமையாக நிறைவேற போவதுபோலத் தோன்றியது.

ஆனால், யோசுவாவும் மரித்தார். அதன்பின்பு தாவீது மற்றும் சாலொமோன் அவர்களுக்கு இராஜாக்களாக தரப்படும் வரையிலும் அவர்கள் ஒரு ஜாதியாராக முன்னேற்றமடைந்தில்லை. அவர்கள் காலத்தில் இஸ்ரயேலர் மேன்மையின் உச்சத்தை அடைந்தபோதிலும்,



நிறைவேற்றப்படவிருக்கும் வாக்குத்தத்தத்தைக் காணமுடியாதவர்களாக, அவர்களுடைய மகிமையிலிருந்து வெகுசீக்கிரத்தில் தள்ளப்பட்டதுடன், மற்ற தேசங்களுக்கு கப்பம் கட்டுபவர்களாக மாறினர். சிலர் இன்னும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மேல் நம்பிக்கையுடையவர்களாய் இன்னும் அந்த மாபெரும் இரட்சகரை எதிர்பார்த்தவர்களாய் மோசே, யோசுவா, தாவீது, சாலொமோன் போன்றவர்கள் அவருக்கு நிழலாய் மாத்திரம் இருந்தார்கள் என நம்பினர்.

இயேசு பிறந்த சமயம், எல்லாரும் மேசியாவுக்காகவும் வரப்போகிற அந்த இஸ்ரயேலின் இராஜாவுக்காகவும், எதிர்பார்த்து அவர் இஸ்ரயேலின் மூலம் முழு உலகத்தையும் ஆளுவார் என்ற எதிர்பார்ப்பில் அவர்கள் இருந்தார்கள். இஸ்ரயேலர் தங்களுக்கு அளிக்கப்பட்ட நிழல்கள் மூலமும், தீர்க்கதரிசனங்கள் மூலமும் வரப்போகிற மேசியாவாகிய இராஜாவின் மகிமையையும் வல்லமையையும் மாத்திரம் அதிகமாய் கவனித்து, அதன்மேல் நம்பிக்கையுள்ளவர்களாய் இருந்தார்களே தவிர, அவர் இந்த உலகத்தில் ஆசீர்வாதத்தைக் கொண்டுவருமுன், பாவிகளுக்கான மீட்கும்பொருளாக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து, பாடுகளையும் மரணத்தையும் அடைய வேண்டும் என்பதைக் குறிக்கும் மற்ற நிழல்களையும், தீர்க்கதரிசனங்களையும் கவனிக்கத் தவறிவிட்டனர். எகிப்திலிருந்து இஸ்ரயேலர் விடுவிக்கப்படுமுன் ஏற்படுத்தப்பட்ட பஸ்கா பலிகளும், நியாயப்பிரமாண உடன்படிக்கையில் தரப்பட்ட மிருகங்களின் பலிகளும், வருடா வருடம் ஆசாரியர்களால் செலுத்தப்பட்ட பாவ நிவாரண பலிகளும் இதற்கு முன்னடையாளமாயிருந்தன. (எபி.9:11–20; 10:8–18) ‘‘கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும் அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்த’’ (1 பேதுரு 1:11) தீர்க்கதரிசிகளின் வாக்கியங்களைக்கூட அவர்கள் கவனியாமற் போனார்கள். ஆகவேதான், இயேசு ஒரு பலியாக வந்தபோது அவரை அங்கீகரிக்கவில்லை. அவர்கள் தங்களை சந்திக்கும் காலத்தை அறியாமற்போனார்கள். (லூக்கா 19:43) இயேசு மரித்தபோது அவரைப் பின்பற்றினவர்களும் (சீஷர்கள்) கூட குழப்பத்திற்குள்ளாகி, ‘‘அவரே இஸ்ரயேலை மீட்டு இரட்சிப்பவர் என்று நாங்கள் நம்பியிருந்தோம்’’ (லூக்கா 24:21) என்று வருத்தத்துடன் கூறினர். அவர்மேல் அவர்கள் வைத்த நம்பிக்கை தவறானது என தெளிவாக அவர்களுக்குத் தோன்றியது, அவர்களுடைய தலைவரின் மரணமானது

வரப்போகும் ஆசீர்வாதங்களைத் தரும் புதிய உடன்படிக்கையின் உறுதியும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட உடன்படிக்கையின் நிறைவேறுலின் ஒரு பாகம் என்பதையும் கவனிக்கத் தவறினர் என்றாலும், இயேசு கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்துவிட்டாரென்று அவர்கள் அறிந்ததும் உதிர்ந்துபோன அவர்களுடைய நம்பிக்கையானது மீண்டும் உயிரடைய ஆரம்பித்தது. (1 பேதுரு 1:3) மேலும் அவர், அவர்களை விட்டுப் பரலோகத்திற்குச் செல்லும் தருணத்தில், அவர்களுடைய நீண்ட காலமாக காத்துவந்த, அடிக்கடித் தாமதப்படுத்தப்பட்டு வந்த நம்பிக்கையினால், "ஆண்டவரே, இக்காலத்திலா இஸ்ரயேலருக்கு இராஜ்யத்தை திரும்பக் கொடுப்பீர்?" எனக் கேட்டனர். "பிதாவானவர் தம்முடைய ஆதீனத்தில் வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" என இயேசு கூறிய பதிலில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை நிறைவேறும் காலத்தை அறிவது அவர்களுக்கு அவசியமாயிருந்ததில்லை என்றும் விளங்குகிறது. (அப்.1:6, 7)

இயேசு பரலோகத்திற்கு ஏறிச்சென்ற பிறகு தேவத் திட்டத்தின் எந்த அம்சம் தற்போது நிறைவேறியுள்ளது? என அவர்கள் சிந்தித்திருக்க வேண்டும். ஆனால், இராஜ்யம் சம்பந்தமான நமது கர்த்தரின் உபதேசங்கள் பிரதானமாக உவமைகளாகவும், மறைபொருளாகவும் இருந்தன என்பதை நாம் கண்டிப்பாக நினைவுகூற வேண்டும். பெந்தெகொஸ்தே நாளின் ஆசீர்வாதம் வருமுன், இவைகளை அவர்கள் அறிந்துகொள்ள முடியாதிருந்தது. இயேசு அவர்களிடம், "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்" (யோவான் 16:12, 13; 14:26) என்று கூறினார். ஆகையால் பெந்தெகொஸ்தே ஆசீர்வாதத்திற்கு முன் அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

பரிசுத்த ஆவியை அடைந்த பின்பும் நடந்தேறிவரும் வேலையைப் பற்றியும், ஆதி உடன்படிக்கைக்கும் அதற்குமுள்ள சம்பந்தத்தைப் பற்றியும் இயேசுவின் சீஷர் உடனடியாக தெளிவாகவும் முழுமையாகவும் அறியக் கூடாதவர்களாயிருந்தனர். (அப்.11:9; கலா.2:2,12,14) இருந்தபோதிலும் அவர்கள் அதைப்பற்றி முழுமையாகவும், தெளிவாகவும் புரிந்துகொள்ளும் முன்பாகவே அவர்கள் தேவனுடைய வார்த்தைகளைப் பேச பயன்படுத்தப்பட்டதுடன் அவர்கள் ஏவப்பட்டுப்பேசின வார்த்தைகள் முழுவதும் தெளிவான மற்றும் ஆழமான சத்தியங்களாய் இருந்தாலும், அவர்களே புரிந்துகொள்ளமுடியாதவண்ணம் இருந்தன. உதாரணமாக, அப்.15:14–16ல், யாக்கோபினுடைய வார்த்தைகளைப் படித்தோமானால், அவர் பேசும்போது, "தேவன் புறஜாதிகளினின்று தமது நாமத்திற்காக (மணவாட்டியாகிய) ஒரு ஜனத்தைத் தெரிந்துகொள்ளும்படி முதல் முதல் அவர்களுக்கு கடாட்சித்தருளின விதத்தை சிமியோன் விவரித்துச் சொன்னாரே, அதற்கு தீர்க்கதரிசிகளுடைய வாக்கியங்களும் ஒத்திருக்கிறது. எப்படியெனில், மற்ற மனுஷரும் என்னுடைய நாமந்தரிக்கப்படும் சகல ஜாதிகளும் கர்த்தரைத் தேடும்படிக்கு, நான் இதற்குப் பின்பு (அதாவது புறஜாதிகளினின்று ஒரு ஜனம் கூட்டிச் சேர்க்கப்பட்ட பிறகு) திரும்பிவந்து, விழுந்துபோன தாவீதின் கூடாரத்தை (அதாவது பூமிக்குரிய இராஜ்ஜியத்தை) மறுபடியும் எடுப்பித்து, அதிலே பழுதாய்ப் போனவைகளை மறுபடியும் சீர்படுத்தி அதை செவ்வையாய் நிறுத்துவேன்" என்று அறிவிக்கிறார்.



சுவிசேஷமானது முதலாவது புறஜாதி கிறிஸ்தவராகிய கொர்நெலியுவிடம் பேதுரு அனுப்பப்படுதலையும், பொதுவாக எல்லா புறஜாதி மக்களுக்காக அப்.பவுல் அனுப்பப்படுதலையும், இந்த யுகத்தில் விசுவாசிக்கிற யூதரும், புறஜாதியாரும் ஒரே விதமான தயவைப் பெற வேண்டியதைப் பற்றியும், அப்.யாக்கோபு தேவனுடைய திட்டத்தைப் படிக்கத் தொடங்கினார். பின்பு தீர்க்கதரிசனங்களிலும் அவ்வாறே இருப்பதையும் அறிந்துகொண்டார். மேலும், சுவிசேஷ யுகத்தில் நடந்தேற வேண்டிய வேலை முடிந்த பிறகுதான் மாம்சீக இஸ்ரயேலருடைய வாக்குத்தத்தங்கள் நிறைவேறும் என்பதையும் உணர்ந்துகொண்டார். வெகுகாலமாய் மறைந்திருந்த இந்த மாபெரும் இரகசியம் தேவனுடைய விசேஷித்த சிநேகிதரான பரிசுத்தவான்களாகிய சிலரால் மாத்திரம் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்துகொள்ளப்பட ஆரம்பித்தது.

கொலேசெயர் 1:27ல் பவுல் கூறும்போது "கிறிஸ்துவானவர்

மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே'' ஆதிகாலங்களுக்கும் தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து இப்போது பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தப்பட்டஇரகசியமென்று கூறுகிறார்.

## ''மகிமையின் நம்பிக்கையாக கிறிஸ்து உங்களுள் இருக்கிறார்''

பரிசுத்தவான்கள் அல்லது உடன்படிக்கை செய்த விசுவாசிகளாகிய இந்த விசேஷித்த வகுப்பாரைத் தவிர முற்காலங்கள் முதல் இன்று வரை மற்ற எல்லாருக்கும் மறைக்கப்பட்டிருந்த தேவனுடைய மாபெரும் இரகசியம் இதுவே ஆகும். ஆனால், ''கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறார்'' என்பதன் அர்த்தமென்ன? இயேசு பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். (அப்.10:38) அதினாலேயே அவர் கிறிஸ்து என்று நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஏனெனில், கிறிஸ்து என்பதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பது பெருளாகும். மேலும், அப்.யோவான் (1 யோவான் 2:27) கூறும்போது, நாம் பெற்ற அபிஷேகம் நம்மில் நிலைத்திருக்கிறதென்று சொல்லியிருக்கிறார். ஆகவே, சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்கள் தேவனுக்கு முன்பாக இராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருக்கும்படி அபிஷேகம் பண்ணப்பட்டிருக்கிறார்கள். (2 கொரி. 1:21; 1 பேதுரு 2:9) ஆண்டவரும் தலைவருமாயிருக்கிற கிறிஸ்துவோடு இவர்கள் இணைந்து யேகோவா தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட முழுமையான கிறிஸ்துவாகிறார்கள்.

நாமும் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் என்ற அப்.யோவானுடைய இந்த போதகத்திற்கு இசைவாக அப்.பவுல் இதை, கடந்த யுகங்களில் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இவ்விஷயம், இப்போது பரிசுத்தவான்களுக்கு, கிறிஸ்து (அபிஷேகம் பண்ணப்பட்டவர்) தனிப்பட்டவராக அல்ல மாறாக, அநேகர் உள்ளடக்கியவர் என்று உறுதிபடுத்துகிறார். எவ்வாறு மனித சரீத்தில் அநேக அவயவங்கள் இருந்தும் அது ஒரே சரீரமாயிருக்கிறதோ, அவ்வாறே கிறிஸ்துவும் இருக்கிறார். (1 கொரி.12:12–28) இயேசு சபையாகிய தம்முடைய சரீரத்திற்கு (அல்லது மணவாட்டி – இன்னொரு வகையில் உருவகப்படுத்தப்பட்டதுபோல எபே.5:25–30) தலையாக அல்லது ஆண்டவராக அபிஷேகம் பண்ணப்பட்டு இவர்கள் ஒன்றாக இணைந்து – மாபெரும் இரட்சகராக, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தாக




அமைகிறார்கள். ''நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படியே சுந்திரராயுமிருக்கிறீர்கள்.'' (கலா.3:29)

அப்.பவுல், எல்லாவற்றிலும் இயேசு முதல்வராயிருக்கும்படி, ''தேவன் எல்லாவற்றையும் அவருடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தி எல்லாவற்றையும் எல்லாவற்றாலும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய சரீரமான சபைக்கு அவரை எல்லாவற்றிற்கும் மேலான தலையாகத் தந்தருளினார்'' (கெலோ.1:18; எபே.1:23) என இயேசுவைக் குறித்து சொல்லப்பட்ட இந்த வசனத்திற்கு விரோதமாக எவ்வித அனுமானங்களிலிருந்தும் சபையைக் காக்கிறார். இருந்தாலும், மனித சரீரத்தின் உதாரணத்தைக்கொண்டு, மிகவும் அழகாகவும் உறுதியாகவும் இயேசுவுக்குடனான நமது நெருங்கிய உறவை உருவகப்படுத்துகிறார். இதே ஒருமைப்பாட்டை இயேசு கூறும்போது, ''நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள்'' என்கிறார். (யோவா.15:5)

அபிஷேகம் பண்ணப்பட்ட கிறிஸ்துவின் அங்கங்களாக, கர்த்தராகிய இயேசுவுக்குள் நம்முடைய ஒருமைப்பாட்டை கூர்நுனிக்கோபுர (பிரமீடு) உருவத்தினால் நன்கு விளக்குகிறது.

அதின் தலைக்கல் அல்லது உச்சிக்கல் தன்னில்தானே ஒரு பரிபூரணமான கூர்நுனிக் கோபுரமாயிருக்கிறது. அதின் மற்ற கற்கள் தலைக்கல்லின் குணநலத்திற்கிசைவாக அதற்குக் கீழாக கட்டப்பட்டால் முழு கட்டடமும் ஒரு பரிபூரணமான பிரமிடாக இருக்கும். ''கிறிஸ்துவின்''– –''சந்ததியின்'' ஒரு அங்கமாக நம்மை இது எவ்வளவு அழகாக சித்தரித்து காண்பிக்கிறது. கிறிஸ்துவின் அங்கத்தினர்களாக நம்முடைய தலையாகிய அவரோடு ஜீவ கற்களாக இசைவாக இணைக்கப்பட்டிருக்கும்போது நாம் பூரணராயிருக்கலாம். அவரிடமிருந்து பிரிக்கப்பட்டால் நாம் ஒன்றுமில்லை.

பரிபூரணராகிய இயேசு மிகவும் உன்னத நிலைமைக்கு உயர்த்தப்பட்டிருக்க, இப்போது அவருடைய மாதிரியின்படியே வடிவமைக்கப்பட்டு தேவனுடைய கட்டடமாக கட்டப்படுவதற்கு நம்மை நாமே அவருக்கு ஒப்புக்கொடுக்கிறோம். ஒரு சாதாரண கட்டடத்தில்



மூலைக்குத் தலைக்கல் இருக்காது. ஆனால், மேற்காட்டிய நம்முடைய கட்டடத்தில் மூலைக்குத் தலைக்கல் அல்லது உச்சிக்கல் இருக்கிறது. எழுதியிருக்கிறபடி: "இதோ தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்... அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும் ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்கு பிரியமான பலிகளை செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்."(1 பேதுரு 2:4–6) வெகு சீக்கிரத்தில் "தலையாகிய" இயேசுவும் "அவருடைய சரீரமாகிய திருச்சபையும்" இணைந்து முழுமையடையும் என்று நாம் நம்புகிறோம்.

மேலும், பிரியமானவர்களே, நாம் அதிகமதிகமாக மறுரூபமடைந்து அவருடைய மாதிரியின்படியே நடக்க, மாபெரும் சிற்பாசாரியாகிய அவருடைய வழிகாட்டுதலின்படி அநேக சிட்சைகளையும் மெருகூட்டுதலையும் நாம் சகிக்க வேண்டும். அவருடைய திறமையும் உண்மையும் நம்மில் வெளிப்படும்படிக்கு, அவருடைய சித்தம் நம்மில் நிறைவேறும்படிக்கு அவருடைய கிரியைக்கு விரோதமாக நம்முடைய சுய சித்தத்தை நிறைவேற்றக் கூடாது. நாம் சிறுபிள்ளைகளைப்போல "தாழ்மையை அணிந்துகொள்ள வேண்டும்." ஏனெனில், "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." ஆகவே, நம் தலையும்,



நமக்கு முன்னோடியுமாக ஓடி முடித்தவருமாயிருக்கிறவரை உயர்த்தியதுபோல், நாமும் ஏற்ற காலத்தில் தேவனால் உயர்த்தப்படும்படிக்கு நம்மைத் தாழ்த்தி, அவரது பலத்த கரங்களுக்குள் அடங்கியிருப்போம். (1 பேதுரு 5:5–6; பிலிப்பியர் 2:8, 9)

உண்மையிலேயே இது ஒரு அற்புதமான செய்தியாயிருக்கிறது. இந்த மேலான பரம அழைப்பைப் பற்றி தேவ வசனத்தில் ஆராயும்போது நமக்கு உண்டான கிருபையைக் (ஆசீர்வாதத்தைக்) குறித்து தீர்க்கதரிசிகள் வியக்கத்தக்க விதமாக கருத்தாய் பேசியிருக்கிறார்கள். (1 பேதுரு 1:10) அன்றியும் நிழல்களும், உவமைகளும் இதுவரை கருகலாயிருந்த வார்த்தைகளும் இப்போது வெளிச்சம் பெற்று, கிறிஸ்துவுக்குள் அபிஷேகம் பண்ணப்பட்ட வகுப்பார், இப்போது வெளியாக்கப்பட்ட பந்தயப்பொருளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் இடுக்கமான வழியில் தன் வெளிச்சத்தை அவர்களுக்கு தருகின்றது. தேவன் ஒரு தனிப்பட்ட இரட்சகரை மாத்திரம் எழுப்பப்பண்ண சித்தமுடையவராயிராமல், அந்த இரட்சகர் அநேகரை உள்ளடக்கினவராக இருக்கிறார் என்ற இந்த இரகசியம் முன் ஒருபோதும் அறியக்கூடாத இரகசியமாயிருந்தது. தங்களைத் தாங்களே கர்த்தருக்கென்று தத்தம் செய்த சுவிசேஷ யுக விசுவாசிகள் இந்த பரம அழைப்பைப் பெற்றுக்கொள்ளும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளனர். இயேசு இவ்விஷயத்தை தம்முடைய சீஷர்கள் ஜென்ம சுபாவமானவர்களாக இருக்கும்போது வெளிப்படுத்த முயற்சி செய்யாமல், அவர்கள் பெந்தெகொஸ்தே நாளில் புதிய சிருஷ்டிகளாக பரிசுத்த ஆவியினால் அபிஷேகம் செய்யப்படும் வரை காத்திருந்தார். "புதிய சிருஷ்டிகள்" தவிர வேறு யாரும் இந்த மேலான அழைப்பைப் பற்றி இப்போது புரிந்து உணர்ந்துகொள்ள முடியாது என பவுல் அப்போஸ்தலன் விவரிக்கிறார். அவர் கூறும்போது, "உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் தம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகிறோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை... எழுதியிருக்கிறபடி தேவன் தம்மில் அன்புகூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை, நமக்கோ தேவன் அவைகளை தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்" (1கொரிந்தியர் 2:6–14) எனக்

கூறுகிறார்.

கலாத்திய சபைக்கு அப்போஸ்தலர் பவுல் எழுதியபோது, இந்த முழு இரகசியத்தையும் வெளிப்படுத்தி, ஆபிரகாமின் உடன்படிக்கை எவ்வாறு நிறைவேறும் என காண்பித்திருக்கிறார். இஸ்ரயேலருக்குத் தரப்பட்ட நியாயப்பிரமாணம் இந்த பூர்வ உடன்படிக்கையை எவ்வளவேனும் தள்ளிப்போடாதென்றும், சகல ஜாதிகளையும் ஆசீர்வதிக்கும் ஆபிரகாமின் சந்ததி கிறிஸ்துவே எனவும் காண்பித்திருக்கிறார். (கலா.3:15–18) பின்பு ஏற்கனவே மறைமுகமாக இருந்த விஷயமாகிய பரிசுத்த ஆவிக்குள்ளாக அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள் அனைவரும் சேர்ந்ததே கிறிஸ்து என்பதைக் குறித்து கலா.3:27–29ல் ‘‘ஏனெனில் உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக்கொண்டீர்களே... நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும் வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயுமிருக்கிறீர்கள்’’ என்று சொல்லியிருக்கிறார். அன்றியும் கலாத்தியர் 4ம் அதிகாரத்தில் இதே விஷயத்தைக் காண்பிக்கும்பொருட்டு, ஆபிரகாம் யேகோவா தேவனுக்கும், சாராள் வாக்குத்தத்தம் அல்லது உடன்படிக்கைக்கும் ஈசாக்கு கிறிஸ்துவுக்கும் (தலையும், சரீரமும்) முன்னடையாளமாகக் காண்பித்ததுடன் வசனம் 28ல் ‘‘ சகோதரரே நாம் ஈசாக்கைப் போல வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாயிருக்கிறோம்’’ என்றும் விவரிக்கிறார். ஆகவே சுவிசேஷ யுகத்தில் கிறிஸ்துவின் (திருச்சபையாகிய கிறிஸ்து) வளர்ச்சி ஆரம்பிக்கும் வரை தேவனுடைய திட்டங்கள் நிழலான காரியங்களில் மறைக்கப்பட்டிருந்தது.

இந்த இரகசியத்தை மறைத்து வைப்பதற்கு அவசியமில்லாதிருந்தால், அவ்வண்ணமாக மறைத்து வைக்கப்பட்டிருக்க மாட்டாது. இத்தேவ திட்டங்கள் மனுக்குலம் முழுவதற்கும் வெளிப்படுத்தப்பட்டிருந்தால் அது தோல்விக்கு ஏதுவாயிருக்கும். எவ்வாறெனில், மனிதர் அறிந்திருந்தார்களானால், மகிமையின் கர்த்தரையாவது அல்லது அவருடைய சரீரமான சபையையாவது சிலுவையில் அறைந்திருக்க மாட்டார்கள். (1 கொரிந்தியர் 2:8) தேவத் திட்டமானது உலகத்திற்கு இரகசியமாயிருந்திராவிட்டால் மனிதருடைய



மீட்புக்கான விலைக்கிரயமாக, இயேசுவின் மரணமோ அல்லது கிறிஸ்துவின் பாடுகளுக்கு உடன்பங்காளிகளாக, சபையினுடைய விசுவாச சோதனையோ கூடாத காரியமாய் இருந்திருக்கும். ஏனென்றால், ‘‘உலகம் அவரை அறியாதபடியினால் நம்மையும் (உடன் சுதந்திரர்) அறியவில்லை.’’ (1 யோவான் 3:1)

தேவனுடைய தெய்வீகத் திட்டமும், அத்தெய்வீகத் திட்டத்தின் மையமாகிய கர்த்தராகிய கிறிஸ்து மாத்திரம் இவ்வுலகத்திற்கு இரகசியமானதாயிராமல், சிறுமந்தை அல்லது விசேஷித்த ஒரு ஜனமாக அழைக்கப்பட்டவர்கள், தற்போது நடந்துகொண்டிருக்கும் அவர்களுடைய விசேஷமான அல்லது வித்தியாசமான வாழ்க்கையும் இரகசியமாகவே இருக்கிறது. இயேசு எவ்வளவோ திறமை வாய்ந்தவராக இருந்து தம்முடைய கவனத்தையும், காலத்தையும், திறமையையும் – அரசியலிலாவது, சட்ட விஷயங்களிலாவது, வியாபாரத்திலாவது அல்லது அக்கால பிரசித்திபெற்ற மதங்களிலாவது செலுத்தியிருப்பாரானால் அனைவராலும் போற்றக்கூடிய பெரிய மனிதராயிருக்கலாம். அவ்வாறு அவர் செய்யாமல் இருந்ததும் இவ்வுலகிற்கு இரகசியமானதாயிருக்கிறது. இவ்வுலகின் பார்வையில் அவர் ஒரு முட்டாளாகவும், வாழ்க்கையை வீணடிக்கிறவராகவும் தென்பட்டதுடன், அவரை ‘‘பிசாசு பிடித்தவரென்றும், பைத்தியக்காரர் என்றும்’’ கூறினர். அவருடைய வாழ்க்கையும், உபதேசங்களும், அவர்களுக்குப் புரிந்துகொள்ள முடியாத புதிராக இருந்தன. அவரை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதே விதமாகவே அவருடைய அப்போஸ்தலரும், அவருடைய சீஷர்களும் இவ்வுலக பிழைப்பின் வேலையையும் லாபத்தையும் விட்டு, புறக்கணிக்கப்பட்டு அவமான சிலுவை மரணமடைந்த இயேசுவின் மரணத்தின் மூலம் பாவ மன்னிப்பு உண்டென்று பிரசங்கித்துக் கொண்டிருந்ததால் அவர்களும் இவ்வுலகிற்குப் புரியாத புதிராகவே இருந்தனர். பவுல் அப்போஸ்தலனும் தனக்கிருந்த மேன்மையான அந்தஸ்தையும், சமூக செல்வாக்கையும் விட்டு தன் சொந்தக் கைகளால் வேலை செய்து, கிறிஸ்துவைப் பற்றியும் அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்கிற விசுவாசிகள் அனைவரும் பெறப்போகிற ஜீவகிரீடம் பற்றி பிரசங்கிக்கும்போதும், அது சிலருக்கு இரகசியமாக இருந்து, ‘‘பவுலே,

நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது'' (அப்.26:24) எனக் கூறினர். மேலும், அப்போஸ்தலர் பவுலைப்போல கிறிஸ்துவினுடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடப்பவர்களும், கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் முட்டாள்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஆனால், தேவனுடைய திட்டங்களெல்லாம் எக்காலத்திற்கும் புரிந்துகொள்ளவே முடியாத அல்லது மறைக்கப்பட்ட இரகசியமாகவே இருக்காது. ஆயிர வருட அதிகாலையின் ஆரம்பம் தேவனைப் பற்றிய முழு வெளிச்சத்தை மனிதருக்குக் கொண்டு வந்து, ''முழு உலகமும் தேவனை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்.'' அப்போது, நீதியின் சூரியன் தன் ஆரோக்கியமான செட்டைகளோடு எழும்போது அறியாமை என்னும் இருள் நீங்கும். அதாவது நீதியின் சூரியனாகிய கிறிஸ்து எழும்போது தலையாகிய அவர் மட்டுமல்ல, அவருடைய சரீரமான சபையின் அங்கங்களும் சேர்ந்து, அந்த நீதியின் சூரியனாக இருப்பார்கள். எழுதியிருக்கிறபடி, அவரோடுகூடப் பாடுபட்டால் அவரோடுகூட மகிமையும் அடைவோம். (ரோமர் 8:17; 2 தீமோத்தேயு 2:11, 12) ''நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது நாமும் அவரோடுகூட மகிமையில் வெளிப்படுவோம்.'' (கொலோ.3:4) ''அப்போது நீதிமான்கள் தங்கள் பிதாவின் இராஜ்யத்தில் சூரியனைப்போல் பிரகாசிப்பார்கள்.'' (மத்தேயு 13:43)

''கிறிஸ்துவின் சிந்தையைப்'' பெற்று புதிதாய் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் தவிர, மற்றெல்லாருக்கும் நாம் விசுவாசிக்கிற வாக்குத்தத்தங்களும், நம்மை வளர்க்கிற நம்பிக்கைகளும் அங்கீகரிக்கப்படவும், ஏற்றுக்கொள்ளப்படவும் கூடாததும், சந்தேகத்திற்கிடமானதுமான பொய்த் தோற்றமுடையதாகவும் காணப்படுகிறது. இப்போது தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியை தம்முடைய ''ஊழியக்காரர் மேலும், ஊழியக்காரிகள் மேலும்'' ஊற்றுவதுபோல, இனிவரும் யுகத்தில் ''மாம்சமான யாவர் மேலும்'' தம்முடைய ஆவியை ஊற்றும்போது, இப்போது ''சிறுமந்தையால்'' உணர்ந்துகெள்ளப்பட்ட அதே வாக்குத்தத்தங்களை நிச்சயமாகவே அனைவரும் புரிந்து உணர்ந்துகொள்வார்கள். அப்போது அவர்கள் திருச்சபையின் கீழ்ப்படிதலையும், அதன்பின் சபை உயர்த்தப்பட்டதையும் குறித்து சந்தோஷப்பட்டு, ''நாம் சந்தோஷப்பட்டு களிகூர்ந்து அவருக்கு



துதி செலுத்தக்கடவோம். ஆட்டுக்குட்டியானவருடைய கலியாணம் வந்தது. அவருடைய மனைவி தன்னை ஆயத்தம்பண்ணினாள்'' (வெளி.19:7) என்று சொல்வார்கள். திருச்சபை மகிமையடைவதில் அவர்கள் சந்தோஷப்படுவார்கள். சபை மூலமாகவே அவர்களுக்கு ஆசீர்வாதங்கள் பொழியப்படும். அபிஷேகம் பண்ணப்பட்டவர்களால் (தலையும் சரீரமும்) சுதந்தரித்துக்கொள்ளப்பட்ட ''மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்'' தங்களுடையதல்லவென்றும் அவர்கள் காணும்போது, திருச்சபையில் விளக்கப்பட்ட பாடத்தினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அப்போது தங்களுக்கு அளிக்கப்படும் ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு ஓடும்போது, திருச்சபையின் முன்மாதிரியைப் பின்பற்றி அவர்கள் நிமித்தம் தேவனை மகிமைப்படுத்துவார்கள். ஆனால், இந்த அறிவு பொல்லாத இச்சைகளைக் கொண்டுவராது. ஏனெனில், புதிய ஆட்சிமுறை அல்லது ஒழுங்கு முறைகளின்கீழ் அவர்களின் பரிபூரண மாம்சீக அழைப்பு அவர்களுக்கு பரிபூரண திருப்தியைத் தருவதோடு சுபாவ மாறுதலைவிட விரும்பத்தக்கதாகக் காணப்படும்.

அப்போது ''இரகசியம்'' முடிவுபெறும். ஏனெனில், தேவனுடைய ஆவி கிறிஸ்துவில் இருந்ததென்றும், கிறிஸ்துவினுடைய ஆவி நம்மிலிருந்ததையும் தாங்கள் இதுவரை அறியாமற்போனதை உலகத்தார் கண்டுகொள்வார்கள். மேலும், நாம் மூடராக அல்லது பைத்தியக்காரராக இருந்ததில்லை என்பதையும் அறிவார்கள். மேலும், சபையானது, உலகத்தாரால் உணர்ந்துகொள்ள முடியாததும், நித்தியமானதுமான மகிமையையும், கனத்தையும், கிரீடத்தையும், ஆஸ்தியையும் அடையும்படி ஓடினபோது, தங்களிலும் மேலான பங்கை முன்பே தெரிந்துகொண்டோமென்று அவர்களுக்கு அப்போது வெளியரங்கமாயிருக்கும்.

ஏழாம் சபைத் தூதனின் எக்காளம் தொனிக்கும் நாட்களிலே தேவ இரகசியம் நிறைவேறும் என காலத்தை குறிப்பிட்டு வெளி.10:6ல் சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு இரகசியம் என்பது அது பயன்படுத்தப்பட்டுள்ள இரு அர்த்தத்திற்கும் பொருந்துகிறது. தேவ திட்டங்களின் இரகசியமான காரியங்கள் வெளியாக்கப்பட்டு தெளிவாக காணப்படும். தேவனுடைய தெய்வீகத் திட்டத்தின் முக்கிய அம்சமான

திருச்சபையாகிய "தேவ இரகசியமும்" தெளிவாக அறியப்படும். இவ்விரு இரகசியங்களும் அப்போது முடிவுபெறும். தேவ திட்டத்தில் இரகசியமாக உள்ள கிறிஸ்துவின் சரீர அங்கத்தினர்கள் அல்லது கிறிஸ்துவின் சரீரம் அப்போது முடிவடையும். அதன்பின்பு தேவ திட்டமானது இரகசியமாக வைக்கப்படுவதில் எவ்வித நோக்கமும் இல்லாத காரணத்தினால், அதுவரை இரகசியமான தேவ திட்டம் முற்றுப் பெற்றுவிடும். இவ்வளவு காலமாக வாக்குத்தத்தங்களிலும், முன்னடையாளங்களிலும் உவமைகளிலும் மறைத்து வைக்கப்பட்டிருந்ததும், இந்த இரகசியத்தில் பங்குபெற அழைக்கப்பட்டவர்களுக்கு (எபே.3:9), அளிக்கப்பட்ட ஆச்சரியமான தேவ கிருபையையும், 6000 வருடங்களுக்குப் பிறகு அந்த தேவ இரகசியம் முடிவடையும் சமயத்தில் சம்பவிக்கும் வேலை, மகா பெரியதும் மேன்மையானதும் இவ்வளவு ஆயத்தங்களுக்குப் பாத்திரமானமாய் இருக்கவேண்டுமென்று காண்பிக்கிறது. இரகசியத்தின் திரை நீக்கப்பட்டு ஆசீர்வாதம் பொழியப்படும்போது, உலகத்திற்கு வரக்கூடாத ஆசீர்வாதங்கள் ஏதேனும் இருக்க முடியுமா! இது வரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்து பிரசவ வேதனைப்பட்டு காத்திருந்தது, இந்த இரகசியம் நிறைவடைவதற்காகத்தான். வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட "சந்ததி"யாகிய தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதே அந்த இரகசியம். இவர்களுக்குள்ளாகத்தான் (தேவனுடைய புத்திரர்) அவர்கள் அனைவரும் (சர்வ சிருஷ்டியும்) ஆசீர்வதிக்கப்படுவார்கள். (ரோமர் 8:19, 21, 22)

### கர்த்தரின் நாளின் காணிக்கை

"என்னை உமக்கு காணிக்கையாக்குகிறேன்;
ஒவ்வொரு இருதயத் துடிப்பும் உம்முடையது;
ஒவ்வொரு எனது மானிட பந்தமும்;
ஒவ்வொரு எனது மனம் அல்லது இருதயத்தின் செயலும் –
ஸ்தோத்தரிக்கப்பட்ட என் தேவனே!

ஒவ்வொரு நம்பிக்கையும் ஒவ்வொரு பயமும்;
ஒவ்வொரு புன்னகையும் ஒவ்வொரு கண்ணீரும்;
ஒவ்வொரு கீதமும் ஒவ்வொரு கீர்த்தனையும்,



உம்மை மகிமைப் படுத்துகிறோம்.

அவையெல்லாவற்றையும் எடுத்துக்கொள்ளும்,
உம் இரகசிய கயிற்றால் கட்டிக்கொள்ளும்,
என்னில் நீர் மகிமைப்படுவீராக,
ஆராதனைக்குரியவரே!

அவைகளை விருத்திப்பண்ணும் உமது வசனத்தினால்;
பலப்படுத்தும், ஆசீர்வதியும் உயர்த்தும் என் கர்த்தரே
பூரண அன்புடையவரே!
ஆதியும் அந்தமும் ஆனவரே!"

* * * *